REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 27உ வெள்ளி (10—6—55) ★ ★ வெளியூர்: வைகாசி 28உ சனி (11—6—55) [இதழ் 308

மக்கள் சபை உறுப்பினர்கள் குத்துச்சண்டை!

டமாஸ்கஸ், ஜூன் 9—

இந்நாட்டு மக்கள் சபையில், மக்கள் கட்சி, அராபிய சோஷலிஸ்டு கட்சி ஆகியவற்றைச்சேர்ந்த உறுப்பினர்கள் சபைக்குள்ளேயே குத்துச் சண்டையில் ஈடுபட்டனராம்! சபைத் தலைவர், அவசர அவசரமாக சபைக்கூட்டத்தை முடித்திருக்கிறார்.

நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு சர்க்காரிடமுள்ள நிலங்களை வழங்க வேண்டுமெனக் கோரும் நிலச்சட்ட மசோதா ஒன்றை சோஷலிஸ்டுகள் கொண்டுவந்தனர்; மக்கள் கட்சியினர், இதுபற்றி

(4-ம் பக்கம் பார்க்க)

"ஏதுமில்லாத ஏழை முன்னேறவே இல்லை!"

"சமூக நலத் திட்டங்கள் மாற்றப்பட வேண்டும்"

இந்தியப் பேரரசு மீது காங்கிரஸ் பொதுச்செயலாளர் மறைமுக தாக்குதல்

புது, ஜூன் 9—

"சமுதாய நலத் திட்டங்கள், ஏதுமில்லாத ஏழைகளுக்கு எவ்விதப் பயனும் தரவில்லை; ஏற்கனவே ஏதேனும் சிறிது நிலமும், வீடும் உடையவர்கள், தங்கள் நிலத்தையோ, வீட்டையோ, தரப்படும் சிறிய பண உதவியைக் கொண்டு சிறிதளவு அபிவிருத்தி செய்து கொள்வதின் மூலம், தங்கள் வாழ்க்கை நிலையை ஓரளவு உயர்த்திக் கொள்ள மட்டுமே சமூக நலத் திட்டங்கள் பயன்படுகின்றன;

"ஆனால், நிலமோ, வீடோ இல்லாத பெரும்பாலானோர் இத்திட்டங்களால் பயன்பெற முடிவதில்லை; அவர்கள் இருந்தது இருந்தபடியே இருக்கின்றனர். முன்னேறவே இல்லை; ஏனெனில், சமூக நலத் திட்டங்களின்படி பண உதவி பெற அவர்களிடம் நிலமோ, வீடோ இருக்கவில்லை;

"எனவே, இப்போதுள்ள தேவை எல்லாம், சமூக நலத் திட்டங்களில் மகத்தான மாறுதல்கள் செய்யப்பட வேண்டும்; மக்களுக்கு ஏராளமாக வேலை வசதிகள் செய்துதரப்பட வேண்டும்,"

—என்று, காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஸ்ரீமன் நாராயண், மகாராஷ்டிர இளைஞர் காங்கிரஸ் அரங்கு ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் குறிப்பிட்டார்:—

"இதனைச் செய்வதற்கு, அடிப்படை, கனரகத் தொழில்களை அபிவிருத்தி செய்வது மட்டும் போதுமானது அல்ல; தேசிய சுயதேவைப் பூர்த்திக்கும், நாட்டின் பொருளாதார விடுதலைக்கும் அவசியமாயிருக்கிற கனரக அடிப்படைத் தொழில் அபிவிருத்தி செய்யப்படும் அதே நேரத்தில், நாடெங்கும், கிராமத் தொழில் அபிவிருத்திக்கும் ஏற்பாடு செய்தாக வேண்டும்.

"அத்தகைய தொழில்கள்தான் வேலை வசதிகள் அதிகரிக்கவும், ஆங்காங்கே கிடைக்கும் கனிப் பொருள்கள் உற்பத்திப் பொருள்களாக மாற்றப்படவும், அரசியல், பொருளாதார அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிந்திருப்பது பரவலாக்கப்படவும் முடியும். இவைதான், சுதந்திர இந்தியாவில் நிகழுமென காந்தியார் எண்ணிக்கொண்டிருந்தவையாகும்."

வடநாட்டு அகதிகளுக்கு நஷ்டஈடு

185 கோடி ரூபாய் தர இந்தியப் பேரசு திட்டம்

புதுடில்லி, ஜூன் 9—

அகதிகளுக்கு நஷ்டஈடு தருவதற்கான இறுதித் திட்டத்தின்படி ரூ 185 கோடி செலவிடுவதென்றும், அதில் சர்க்கார், ரூ 85 கோடியை தன் பங்காகத் தரும் என்றும், அகதி புனரமைப்பு இலாகா மந்திரி மேகர் சந்த் கன்னா தெரிவித்திருக்கிறார்.

மொத்தம் 3,90,000 பேர் நஷ்டஈடு கோரியிருந்தனர்; அவர்களில் எஞ்சியுள்ள 2,50,000 பேர்களிடமிருந்து திட்டப்படி நஷ்டஈடு கோரும் மனுக்கள் கோரப்படும் என்று மந்திரி தெரிவித்திருக்கிறார்.

சிறுதொகை நஷ்டஈடு கேட்போர் மனுக்கள் விரைவில் பரிசீலனை செய்யப்பட்டு பைசலாகும் என்றும், ரூ 50,000மும் அதற்கும் குறைவான நஷ்டஈடு கோருவோருக்கு ஒரே தவணையில் நஷ்டஈடு தரப்பட்டுவிடும் என்றும் தெரிகிறது.

இந்த உறுதி நஷ்டஈடுத் திட்டம், கடந்த 1953 நவம்பரில் அமுல் செய்யப்பட்ட இடைக்கால நஷ்டஈடுத் திட்டத்திற்குப் பதிலாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

சுமார், 50,000 பேர்களுக்கு மொத்தமாக ரூ. 14 கோடி நஷ்டஈடு தரப்பட்டிருக்கிறது.

ரூ. 10,24,50,214 ரொக்கமாகவும் ரூ. 1,64,67,208 சரிக்கட்டுதல் வகையிலும், ரூ 2,12,96,053 சொத்துவகையிலும் தரப்பட்டிருக்கிறது.

இதுவன்றியில், 10,264 பேர்களுக்கு 2,03,896 ஏக்கர் நிலம் தரப்பட்டிருக்கிறது.

பிரெஞ்சுப் பிரதமருக்கு ரஷ்ய அழைப்பு

பிரெஞ்சுப் பிரதமரையும், வெளிநாட்டிலாகா அமைச்சரையும் அண்மையில் மாஸ்கோவிற்கு வருகை தரும்படி சோவியத் அயல்நாட்டமைச்சர் அழைத்துள்ளார் எனத் தெரிகிறது.

கிளர்ச்சி விரிவாகிறது

ஜூன் 10-ந் தேதியன்று தாங்கள் கடந்த ஒரு மாதகாலமாக நடத்திவரும் உரிமைக் கிளர்ச்சியை ஒட்டி, சாந்திகாரிலும் ஒரு நாள் ஆர்ப்பாட்டம் நடத்துவதென அகாலிதளத்தவர் முடிவு செய்திருக்கின்றனர்.

கிளர்ச்சி ஒருமாத காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருவதைக் குறிப்பிடுவதற்காக, மாநிலத் தலைநகரில் கிளர்ச்சி துவக்கப்படுகிறது என்றும், இது, கிளர்ச்சி இன்னும் தீவிரமாவதற்கான திட்டத்தின் ஒரு பகுதி என்றும் தெரிய வருகிறது.

அமிர்தசரஸ் மாவட்டத்தில், ஜூன் 8-ந் தேதிவரை கைதானோர் எண்ணிக்கை 1,548 ஆகும்; லூதியானா மாவட்டத்தில் மொத்தம் 350 பேர் கைதாகியுள்ளனர்.

★

கப்பல் போக்குவரத்து

இரண்டாம் திட்டத்தில் ரூ. 80 கோடி செலவு!

புதுடில்லி, ஜூன் 9—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கப்பல் போக்குவரத்துக்காக, சுமார் 80 கோடி ரூபாய் பெறுமான அளவு திட்டங்கள் தீட்டப்படும் என்று தெரிகிறது.

கல்கத்தாவை தலைநகராகக் கொண்டு, இரண்டாவதாக ஒரு கப்பல் போக்குவரத்துக் கார்ப்பரேஷனை நிறுவவும் இந்திய சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

யார் அந்த தேசப்பற்றற்றவர்கள்?

'இராணுவம் சமூக சேவைக்குப் பயன்படவேண்டும்' என்கிறார் இராசேந்திரர்

பச்மார்ஷி, ஜூன் 9—

"ஒவ்வொரு நாட்டினுடைய இராணுவத்தையும் சமூக முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்த வேண்டும்"

என்று, இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரர் கருத்தறிவித்திருக்கிறார்.

"ஒவ்வொரு நாடும், தனது கருத்தை சமாதானத்தின்பால் செலுத்தினால், மக்கள் தாங்களாகவே சமூகசேவையில் ஈடுபட்டு அமைதியான வாழ்க்கை நடத்துவர்,"

என்று குறிப்பிட்ட அவர், இந்திய இராணுவத்தினரின் கடந்த கால சேவையை மிகவும் பாராட்டியிருக்கிறார்.

"கடந்த காலத்தில் இந்தியாவை வெளி நாட்டவர் ஆள முடிந்தது என்றால், அதற்குக் காரணம், இந்திய இராணுவத்தின் தோல்வி அல்ல; சிலருடைய தேசப் பற்றற்ற போக்கினால்தான் இந்தியா அடிமையாயிற்று"

பால் பண்ணை ஆராய்ச்சிக் கழகம்

வட நாட்டிற்குக் குடியேற்றப்படமாட்டாது!

மத்திய மந்திரியின் உறுதிமொழி

பெங்களூர், ஜூன் 9—

இங்குள்ள பால்பண்ணை ஆராய்ச்சிக் கழகம், வடநாட்டில் உள்ள கர்நால் எனுமிடத்திற்கு மாற்றப்படமாட்டாது என்று, அந்த ஆராய்ச்சிக் கழக ஊழியர்களுக்கு இந்தியப் பேரரசின் உணவு, விவசாய இலாகா அமைச்சர் அஜித் பிரசாத் ஜெயின், உறுதிமொழி அளித்திருக்கிறார்.

அந்தக் கழகம் கர்நாலுக்கு மாற்றப்படும் என்பதற்கு மாறாக, இங்குள்ள தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வகையில், பல வகையாலும் கழகம் விரிவுபடுத்தி அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆராய்ச்சிக் கழகத்திற்குச் செல்லும் வகையில் ஆராய்ச்சிக் கழகத் தொழிலாளர் சங்கச் சார்பில் தரப்பட்ட ஒரு அறிக்கைக்குப் பதிலளிக்கும்போது மந்திரி மேற்கண்டவாறு கருத்தறிவித்திருக்கிறார்.

தாங்கள் அந்த அறிக்கையை, கழகக் கட்டிடத்திற்குள் வைத்துத் தருவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்று மந்திரியிடம் தொழிலாளர்கள் முறையிட்டுக் கொண்டனர்.

தொழிலாளர்கள் எவரும் ஆட்குறைப்புக்கு ஆளாக்கப்படமாட்டார்கள் என்றும், ஆராய்ச்சிக் கழகத்தின் எதிர்காலம் குறித்து எவரும் அஞ்சத் தேவையில்லை என்றும் மந்திரி குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

அர்த்தமற்றதாம்!

"அகாலி தளத்தவர் நடத்திவரும் கிளர்ச்சி அர்த்தமற்றது," என்று மத்திய அரசாங்க பாதுகாப்பிலாகா மந்திரி டாக்டர் கே. என். கட்ஜூ கருத்தறிவித்திருக்கிறார்.

அகாலி தளத்தவர் பஞ்சாபி மொழி பேசும் மாநிலம் அமைக்கக் கோருவதைக் குறிப்பிட்டு, அவர் கூறினார்:—

"சீக்கியர்கள் நாடெங்கும் பல மாநிலங்களிலுமாகச் சிதறிக் கிடக்கின்றனர்; வேறு பல மாநில அலுவல்களில் பெரும் அளவு பங்கு பெற்றவர்களாகவும் விளங்குகின்றனர் என்பதை அவர்கள் உணர வேண்டும்."

★

குறும்புத்தனமான குற்றச்சாட்டாம்!

'அகாலிதளத்தவர் நடத்தும் கிளர்ச்சி தேச விரோதமானது,' என்ற குற்றச்சாட்டு, "ஆதாரமற்றது — பொய்யானது — குறும்புத்தனமானது,"

என்று, சிரோமணி அகாலிதளத் துணைத் தலைவரும், மக்கள் சபை உறுப்பினருமான சர்தார் பகதூர் சிங் குறிப்பிட்டுள்ளார்.

"கடந்த நான்கு வாரகாலமாக நடைபெறும் இந்தக் கிளர்ச்சியில் அகாலிதளத்தவர் எந்தவிதமான பலாத்காரத்திலும் ஈடுபடவில்லை மாநிலத்தில் எங்கும் எந்தவித வகுப்பு துவேஷச் சம்பவங்களும் நடைபெறவில்லை; இது, 'அகாலி தளத்தவர் எந்தவித அழிவு வேலையிலும் ஈடுபடவில்லை' என்பதை நிரூபிக்கின்றது.

"அகாலிதளத்தவர் எழுப்பும் உரிமைக் குரல் ஆட்சேபகரமானதென பஞ்சாப் சர்க்கார் தடை செய்திருக்கிறது. ஒருவர் அம்மாதிரியான குரல் எழுப்புவதை

(4-ம் பக்கம் பார்க்க)

தாரா சிங் மனு தள்ளுபடி

கிளர்ச்சியை விரிவுபடுத்த அகாலி தள முடிவு

சீக்கியரின் மதம்—அரசியல் பிரிக்க முடியாதவையாம்

சாந்திகார், ஜூன் 9—

மாநிலத்தைத் திருத்தியமைப்பது பற்றி, ஒலி முழக்கம் செய்வதையும், ஊர்வலம் ஆர்ப்பாட்டம் நடத்துவதையும் தடுக்க அமிர்தசரஸ் மாவட்ட நீதிபதி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, மாஸ்டர் தாராசிங் சார்பில் பஞ்சாப் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 'ரிவிஷன்' மனு ஒன்றை, சர்தார் ஹர்நாம் சிங் என்ற நீதிபதி தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியிருக்கிறார் எனத் தெரிகிறது.

Best copy available

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 10—6—'55 வெள்ளி

முன்வர வேண்டும்

★

மக்களாட்சி முறை, அதற்குரிய இலட்சணப்படி நன்கு செயலாற்றப்பட வேண்டுமானல், குடிமக்களுக்கு அதற்கான ஆற்றல் இருக்க வேண்டுமென்பது அடிப்படை தேவையாகும். அதில் துளியும் குறையாமல், ஆட்சிப் பொறுப்பேற்க ஆற்றல் மிக்க ஒரு கட்சியும், அதை, தலைவீக்கம் கொள்ளாமலும் வேண்டுமென்றே தவறிழைக்கத் துணிவு கொள்ள விடாமலும் கண்காணிக்க பலம் பொருந்திய ஒரு மாற்றுக் கட்சியும் இருந்தாக வேண்டும் என்பதும் மற்றொரு முக்கியத் தேவையாகும். அதுவுமன்றி, ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள கட்சிக்கும், அதன் துடுக்கை அடக்கி ஆண்டுவரும் எதிர்க் கட்சிக்கும், மக்களாட்சி முறையை வளர்த்துச் சிறப்புறச் செய்ய வேண்டும் என்பதில் ஒருமைப்பாடும் கண்டிப்பாக இருந்தாக வேண்டும்.

தகுதி வாய்ந்த மக்கள், ஆளும் கட்சி—மாற்றுக் கட்சி, இரண்டு கட்சிகளுக்கும் மக்களாட்சி முறையில் அசைக்க முடியாத பற்றுதல் இருப்பது—ஆகிய மூன்றும் மக்களாட்சி முறைக்கு இன்றியமையாத தேவைகளாக உள்ள மூன்று தூண்களாகும். இந்த மூன்றும் ஒழுங்குபட அமைந்திருந்தால்தான் ஒரு நாட்டில் மக்களாட்சி முறை வேர் விட்டு வளரும். சிறந்த மக்களாட்சி முறையின் மூலம் ஒவ்வொரு தனி நபரும் எதிர்பார்க்கும் நலன்கள் கிடைக்கப்பெறுவதும் சாத்தியமாகும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் இன்று செயலாற்றப்பட்டு வருவது, 'மக்களாட்சி முறை' என்றுதான் பகட்டாக விளம்பரப்படுத்தப்படுகிறது. மேற்குறிப்பிட்டுள்ள மக்களாட்சித் தத்துவத்தின் நிழல் கூட, இன்று நடைமுறையில் இருப்பதாகக் கூறப்படும் ஆட்சி முறையில் காணப்படவில்லை. நுணுகி ஆராய்ந்தால்தான் இந்த உண்மையை நன்கு அறிந்துகொள்ள முடியும்.

மக்களாட்சி என்பது பாரதப் பயிரல்ல. மன்னனின் எதேச்சாதிகாரத்தைஉணர்ந்து, மன்னனை ஒழித்து மக்களால் ஆட்சியுரிமை கைப்பற்றப்பட்டது என்ற வரலாற்றுக்கும், இந்தியத் துணைக் கண்டத்திற்கும் சிறு தொடர்பும் கிடையாது.

இடர்பட்டு இடர்பட்டு இங்கு மக்களாட்சி முறை உருவெடுக்கவுமில்லை — செப்பனிடப்படவுமில்லை. இங்கு கிடைத்துள்ள மக்களாட்சி வெறும் இரவல் சரக்கு!

மக்களாக விரும்பி, தன் முயற்சியால் உருவாக்கப்பட்டதல்ல, இங்குள்ள மக்களாட்சி. மக்கள் விருப்பம் அறியாது—கருத்துத் தெரியாது, பிரிட்டிஷ் ஆதிக்கக்காரர்களால் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டது அல்லது புகுத்தப்பட்டது என்று குறிப்பிடுவதே பொருந்தும்.

இரவல் பொருளைப் பாதுகாப்பதிலும், கருத்தாகப் பயன்படுத்திக்கொள்வதிலும், பெரும்பாலான இரவல் பெற்றவர்களுக்கு அக்கரை இருப்பது கிடையாது. அதிலும், 'வாழ்க்கையே பெருஞ் சுமை—உலகமே மாயம்—பரமனடி சேருவதே பிறவிப் பயன்' என்னும் மனப் பழக்கத்திற்குப் பலியாகிவிட்ட நம்மவர்களிடம், இரவல் பொருளை மிக மிகக் கருத்தாகப் பயன்படுத்திக் கொள்ளுவதை எப்படி எதிர்பார்க்க முடியும்?

பகட்டு ஆட்கொள்ளுவதைப்போல, அறிவு ஈர்ப்பதில்லை பெரும்பாலான மக்களை. மக்களைக் கவருவதில் வெறும் வேஷத்திற்குள்ள ஆற்றல், விஷயஞானத்திற்கு இருப்பதில்லை.

பகட்டும் வேஷமும் மக்களாட்சி வெற்றிக்குக் கேடு சூழ்பவைகளாகும். பகட்டுக்கும் வேஷத்திற்கும் பெரும்பாலான மக்கள் மயங்கும் நிலை இருக்கின்ற வரையில், பெயரளவில்தான் மக்களாட்சி செயல்ப்பட்டுவரும்.

ஜாதிப் பற்று வேறு, மக்களாட்சியின் ஆணிவேரை வெட்டித் துண்டிக்கும் கொடுங்கோடரியாக இருந்து வருகிறது. கொள்கையும், கோட்பாடும், பொது நலனும் ஒதுக்கித் தள்ளப்பட்டு, ஜாதி சதிராடும் நிலை மக்களாட்சியை வளர்க்க உதவாது; அதற்கு மாறாக சுட்டுச் சாம்பலாக்க உதவும்.

மக்களாட்சிக்கு மாறுபட்டுக்கிடக்கும் பெரும்பாலான மக்களின் மனப் பழக்கத்தை மேலே குறிப்பிட்டோம். இனி பிரிட்டிஷாரின் முதல் வாரிசாக இருந்து, மக்களாட்சி உருவில் ஆட்சிப் பொறுப்பை தானமாகப் பெற்ற காங்கிரஸ் தலைவர்களுக்கு மக்களாட்சி வெற்றி பெறுவதில் எவ்வளவு அக்கரை இருக்கிறது எனப் பார்ப்போம்.

உலகத் தூற்றுதலுக்கு அஞ்சி தந்த, வயது வந்தவர்கள் அனைவருக்கும் வாக்குரிமை தந்துள்ளோம் எனக் கூறிக்கொள்வதைத் தவிர்த்து, காங்கிரஸ் தலைவர்களின் நடத்தையில் மக்களாட்சி மாண்பு கடுகளவும் இருப்பது கிடையாது. அந்த மாண்பு இருக்குமானல், தங்களுக்கு எதிராக இயங்கும் அரசியல் கட்சிகளைக் கருவறுப்பதையே கங்கணம் கட்டிக் கொண்டு செய்துவர மாட்டார்கள்.

பலம் பொருந்திய எதிர்க் கட்சி இயங்கவில்லையானல், ஆளும் கட்சியின் அட்டகாசம் அதிகரித்துவிடும்; அவர்களை நம்பி ஆதரித்த மக்களின் நலன்கள் சூறையாடப்படும். விரும்பத்தகாத இத்தகு நிலையைத் தடுக்க வேண்டிய பொறுப்பு ஆளும் கட்சிக்கும் உண்டு; அதன் எதிர்க் கட்சிக்கும் உண்டு.

முற்பகல் செய்ததின் விளைவு இப்பகல் தெரியும்; இப்பகல் நிகழ்ச்சி எதிர்காலத்தை ஆக்கும்.

இந்தியத் துணைக்கண்டத்திற்காக நடத்தப்பெற்ற உரிமைப் போராட்டம், காங்கிரஸ் கட்சிக்கு அரசியலில் முதலிடத்தைக் கொடுத்தது. அந்த ஒரு வாய்ப்பை, தங்களுக்குச்சாதகமாக வைத்துக்கொண்டு, அரசியலில் மற்றக் கட்சிகள் தலைதூக்கவிடாமல் பார்த்துக் கொள்வதை காங்கிரஸ் தலைவர்கள் செய்து வருகிறார்கள். இந்தப் போக்கு வெறும் அதிகாரத்தைப் பெறுவதற்கான போக்கேயாகும். இதனல் மக்களாட்சி முறை மெள்ள மெள்ள மாய்ந்தொழியும். இதைத் தடுக்க நாட்டின்நாயகர்களான நல்லறிவாளர்கள் முன் வர வேண்டும். அதுவும் உடனடியாகச் செய்தாக வேண்டும்.

தென் கொரியரின் கோபம்!

கடுமையான கொள்கையைக் கடைபிடிக்க வேண்டுமாம்!

8000 பேர் ஆர்ப்பாட்டம்

இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் விஷயத்தில் கடுமையான கொள்கையை கடைபிடிக்க வேண்டுமெனக்கோரி சுமார் 8000 தென் கொரியர்கள் 8-ந் தேதியன்று தலைநகர் சியோலில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். 'இவை இரண்டும் கம்யூனிசத்தை ஆதரிக்கும் நாடுகள்,' என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

டில்லியில் உள்ள கொரிய யுத்தக் கைதிகளைப் பேட்டிக் காண தென் கொரிய அதிகாரிகள் அனுமதிக்கப்படாததை அவர்கள் ஆட்சேபித்தனர்

மலேரியா தடுப்பு

சென்னையில் திட்டம் துவக்கம்

சென்னை, ஜூன் 9—

தேசீய மலேரியா கட்டுப்பாடு திட்டம், நேற்று மாலை நகரசபை விளையாட்டு மைதானத்தில், மாகில சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டியால் துவக்கிவைக்கப்பட்டது.

சுமார் $6\frac{1}{2}$ லட்சம் சென்னை வாசிகளுக்கு பயன்தரக்கூடிய இத்திட்டத்துடன், யானைக்கால் சம்மந்தமான வியாதி ஒழிப்பும், 'சலாஜார்' எனும் நோய் ஒழிப்பு வேலைகளும் மேற்கொள்ளபடும் எனத் தெரிகிறது.

இந்திய அமெரிக்க உதவித் திட்டத்தின் கீழ், சென்னை மாகிலத்திற்கு மற்றொரு மலேரியா தடுப்புப் பிரிவை ஒதுக்க இந்திய சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது.

சென்னை நகரம், மற்றும் ஈரோடு, சேலம், திருப்பூர் நகரங்கள், நாமக்கல் பஞ்சாயத்து ஆகியவை இத்திட்டத்தின் அனுகூலத்தைப் பெறுவதுடன் 10 லட்சம் மக்கள், மேற்படி நோய்களிலிருந்து நிவாரணம் பெறுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பாகிஸ்தான் மந்திரி சபை

சுஹ்ரவர்த்தியின் நிலை

பாகிஸ்தான் பார்லிமெண்டரி சர்க்காரை, பஸ்லுல் ஹக் கட்சியின் அபேட்சகரான அபு ஹுசேன் சர்க்கார் வசம் ஒப்படைக்க வேண்டுமென பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்திருப்பதால், தாம் அமைச்சரவையிலிருந்து விலகிக் கொள்ளப் போவதாகவும், இது விஷயத்தில் அவாமி லீகுடன் ஒத்துழைக்கப் போவதில்லை யென்றும், பாகிஸ்தான் சட்ட மந்திரி சுஹ்ரவர்த்தி மிரட்டியுள்ளார் எனத் தெரிகிறது.

இந்திய ஆலைத் துணி ஏற்றுமதியின் எதிர்காலம்

பிற நாடுகளுக்குக் கைமாறுகிறது!

மத்திய கிழக்கு வட்டாரத்திலுள்ள பாரசீக வளைகுடா பகுதியில், எண்ணெய்த் தொழில் செப்பனிடப்படுவதின் விளைவாக, அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், அதன் பலனக, இந்திய ஆலைத் துணிகளுக்கு அதிகத் தேவை ஏற்படுமெனவும், இந்திய ஆலை அரசுகள் எதிர்பார்க்கின்றன.

தரமான துணிகளைத் தருவதின் மூலமும், சாதுரியமான வியாபார முறையின் மூலமும் விற்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ள $4\frac{1}{2}$ கோடி கெஜம் துணியை விற்றுவிட முடியும் என இந்தியப் பேரரசு நம்பிக்கொண்டிருக்கிறது

நீண்டகாலமாகவே, இப்பகுதியில், இந்தியாதான் பருத்தித் துணிகளை ஏராளமாக விற்று வந்திருக்கிறது. இரண்டாம் உலகப்போர் காலத்தில், துணி விற்பனையில் இந்தியா போட்டியின்றி ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கிறது.

அது இப்பொழுது பழங்கதையாகிவிட்டது. ஜப்பானிடமிருந்தும், சில ஐரோப்பிய நாடுகளிடமிருந்தும் இந்தியத் துணிக்குப் போட்டி வளர்ந்துகொண்டு வருகிறது.

ஜப்பான் பெற்றுவரும் வெற்றிக்கு, அது மேற்கொண்டொழுகும் வியாபார நுணுக்கம்தான் காரணம் எனக் கூறப்படுகிறது.

அப்பகுதி மக்கள், பெரிதும் பல வண்ண மெல்லிய ஆடைகளையே விரும்புகின்றனர். ஜப்பானிலிருந்தும், செக்கோஸ்லாவேகியாவிலிருந்தும் இறக்குமதியாகும் துணிகளில் 30 அல்லது 40 மாதிரியான ரகத் துணிகள் இருக்கின்றன; ஆனல் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணிகளிலோ 3 அல்லது 4 ரகத்திற்கு மேல் இருப்பது கிடையாது!

இந்தியாவின் இறக்குமதிக்குறைவுக்கு மற்றொரு காரணமும் உண்டு; அதாவது, 20,000 அல்லது 25,000 கெஜத் துணிக்குக் குறைவாகக் கேட்கப்படும் தேவைகளை இந்திய அரசுகள் நிறைவேற்றித்தர மறுத்து வருகின்றன. அதே நேரத்தில் ஜப்பானும், பிற நாடுகளும் அத்தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்கின்றன.

பட்டுப் பூச்சி அபிவிருத்தி

பெங்களூர் ஜூன் 8—

பட்டுப் பூச்சித் தொழில் அபிவிருத்திக்கான பல திட்டங்களை அமுல் செய்வதற்காக, மைசூர் சர்க்காருக்காக, மத்திய பட்டு போர்டு 9.57 இலட்சம் ரூபாய் மானியமாகவும், கடனாகவும் வழங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வர்த்தகர்களுக்கு

உதவி மந்திரியின் உறுதிமொழியும் உபதேசமும்!

பம்பாய், ஜூன் 8—

இந்திய சரக்குகளுக்கு அயல் நாடுகளில் புதிய மார்க்கெட்டுகள் ஏற்படுத்த உதவி செய்ய இந்திய சர்க்கார் தன்னல் ஆனதையெல்லாம் செய்யுமென்று அயல்நாட்டு இலாகா உதவி மந்திரி டாக்டர் சையத் மாமூத் வர்த்தகர்களுக்கு உறுதி தந்திருக்கிறார்.

மட்ட ரகச் சரக்குகளையும், தரத்துக்குக் குறைவான சரக்குகளையும் ஏற்றுமதி செய்து, இந்தியாவின் நல்ல பெயரைக் கெடுத்துவிட வேண்டாமென்றும், அவர் வர்த்தக சமூகத்தினரை எச்சரித்திருப்பதாகத் தெரிகிறது.

வர்த்தகர்களின் புகார்களுக்கு சர்க்கார் கவனம் செலுத்துவதற்கு முன்னல், அவர்கள், நாணயமாக நடந்துகொள்வதாக உறுதியளிக்க வேண்டுமென்றர்.

'கருணை' நிபந்தனை காலாவதியாகிறது!

நில உரிமை பறிக்கப்படுமா?

நைரோபி, ஜூன் 9—

கென்யா மாவ் மாவ் இயக்கப் பயங்கரவாதிகளுக்குக் கருணை காட்டும் சில நிபந்தனைகளை, கென்யா சர்க்கார் அடுத்த திங்கள் 10-ந் தேதியன்று திரும்பப் பெற்றுக்கொள்ள இருப்பதாகச் செய்திக் குறிப்பொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்தச் சலுகையைப் பயன்படுத்திக்கொள்ளாத அந்தப் பயங்கரவாதிகளின் நில உரிமை பறிக்கப்பட்டுவிடும் என்று கூறப்படுகிறது.

அவரது முதல் பணி

கிழக்கு வங்கத்தின் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் பிரச்சினைக்கே முதல் இடம் தரப்போவதாக கிழக்கு வங்க முதன் மந்திரி அபு ஹுசேன் தெரிவித்திருக்கிறாராம்.

சிகரெட் பழக்கத்தை நிறுத்த......!

பெங்களூர், ஜூன் 8—

"'மனோவசியம்' செய்யப்பட்டால், எத்தகைய 'சிகரெட்' பிரியரும், அந்தப் பழக்கத்தைக் கைவிட்டுவிடுவர்," என்று தகவல் ஒன்று தரப்பட்டுள்ளது.

குழந்தை உணவு

இந்தஆண்டிலிருந்து இந்தியாவில் உற்பத்தியாகும்

சென்னை, ஜூன் 7—

முதன் முதலாக இந்த ஆண்டு இறுதியிலிருந்து குழந்தைகளின் உணவு உற்பத்தி இந்தியாவில் துவங்கும் என்றும், இந்த உணவு உற்பத்திக்காக கைரா மாவட்டத்தில் உள்ள ஆனந்த் எனுமிடத்தில் ரூ. 40 லட்சம் செலவில் ஒரு தொழிற்சாலை கட்டப்பட்டு வருவதாகவும், அங்கு அக்டோபரில் இருந்து உற்பத்தி துவங்கும் என்றும் மைசூர் உணவு ஆராய்ச்சிக் கழக டைரக்டர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

பூர்வக் குடிகள் பற்றி சர்வே!

இரண்டு கோடி பூர்வக்குடிகளின் நிலைமை பற்றி இந்தியப் பேரரசு விரிவான 'சர்வே' ஒன்று நடத்த முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், பூர்வக்குடிகள் பற்றி இரு ஆராய்ச்சி நிலையங்கள் நிறுவப்படும் என்றும், அவற்றில் ஒன்று தென்னிந்தியாவிலும், மற்றொன்று இமயமலைப் பிரதேசத்திலும் இடம் பெறும் என்றும் கூறப்படுகிறது.

ஒரே மாதிரி குடியிருப்புச் சட்டம் வரும்?

மாநில சர்க்கார்களுக்குக் கீழ் சிலவகை உத்தியோக நியமனங்களுக்கு ஒரேமாதிரியானகுடியிருப்பு யோக்கியதாம்சம் நிர்ணயித்து சட்ட மியற்றுவதா என்பது பற்றி இந்திய சர்க்கார் ஒன்றிரண்டு மாதங்களில் திட்டமாக முடிவு செய்யும்.

கிராமப் பிரதேசங்களில் தபால் போக்குவரத்தைத் துரிதப்படுத்துவதற்காக சென்ற ஐந்து ஆண்டுகளில், 'அஞ்சலோடி'கள் சேவை செய்துவந்த 1,754 மார்க்கங்கள் (மொத்தம் 14,519 மைல் தூரம் கொண்டவை) தபால் மோட்டார் சர்வீசுகளின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

தோழியர்

சத்தியவாணிமுத்து

சுற்றுப் பயண நிகழ்ச்சிகள்

★

மேட்டுப்பாளையம் :

25—5—55 மாலை 6 மணிக்கு மேட்டுப்பாளையம் (தஞ்சை மாவட்டம்) மாரியம்மன் கோவிலடியில் தோழர் ந. தருமலிங்கம் தலைமையில் மேட்டுப்பாளையம் தி. மு. கழக 5-ம் ஆண்டு விழா நடைபெற்றது. தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார், தோழர் என். எஸ் இளங்கோ ஆகியோர் கழகத்தின் குறிக்கோளைப்பற்றி விளக்கிப் பேசினர். இரவு 10 மணிக்கு, கழகத் தோழர்களால் 'மக்களாட்சி' என்ற நாடகம் நடித்துக் காட்டப்பட்டது.

அவுரிக்காடு :

26—5—55 காலை 9 மணிக்கு கரியாப்பட்டிணத்தை அடுத்த அவுரிக்காட்டில் தோழர் வீராசாமி —தோழியர் புஷ்பா திருமணம்

தி. மு. கழக மாநில மாநாட்டு நிதி

★

திருச்சியில் நடைபெறப்போகும் மாநில மாநாட்டு நிதிக்கு நன்கொடை, வரவேற்புக் கட்டணத் தொகை அனுப்பி வைக்கும் தோழர்கள், காஞ்சிபுரத்திற்கும், சென்னைக்கும் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் முகவரிக்கு அனுப்பி வைக்காமல், "பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தலைமை தி. மு. கழகம், 'அறிவகம்' இராயபுரம், சென்னை-13" —என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

சென்னை-13, 7—6—'55. } பொறுப்பாளர், 'நம் நாடு.'

ஊராட்சி மன்றத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ரசாக், டி. எஸ். கல்யாணசுந்தரம் ஆகியோர் பேசிய பின்னர் தோழியர் சத்தியவாணிமுத்து 'திருந்திய திருமணம்' எனும் பொருள்பற்றி பேசினார். திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு மணமகனால் ரூ 2 நன்கொடையாக அளிக்கப்பட்டது—பெற்றுக்கொண்டோம் —நன்றி—பொறுப்பாளர்.

புனல்வாயில் :

27—5—55 மாலை 6 மணிக்கு புனல்வாயில் மறுமலர்ச்சி மன்ற ஆண்டு விழா தோழர் சா. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ந. தருமலிங்கம், அரங்கராசன் ஆகியோர் பேசியபின், தோழியர் சத்தியவாணிமுத்து கழக வளர்ச்சி பற்றியும், அரசியல் நிலை குறித்தும் பேசினார்.

கூட்டத்தில் தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார், தோழர் ராமராஜன் அவர்களது ஆண் குழந்தைக்கு 'பரிமளச் செல்வன்' என்றும் தோழர் வி. சுந்தரராஜன் அவர்களது மகனுக்கு 'கரிகாலன்' என்றும், தோழர் மருதமுத்து அவர்களது குழந்தைக்கு 'மதிவாணன்' என்றும் பெயர் சூட்டினார். அதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு, முறையே ரூ. 2, ரூ. 1, ரூ. 1. நன்கொடையாக அளிக்கப்பட்டது—பெற்றுக்கொண்டோம்— நன்றி—பொறுப்பாளர்.

வடகரை—காசாங்குளம் :

29—5—55 மாலை 6 மணிக்கு, பட்டுக்கோட்டை காசாங்குளம் வடகரையில் தோழர் மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் அடைக்கலம், ந தருமலிங்கம், சிவ. கனகசுந்தரம், காஞ்சி—கல்யாணசுந்தரம், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பண்டிதருக்கு மாஸ்கோ தந்த ஆடம்பர வரவேற்பு

பிரிட்டிஷ் பத்திரிகைகளின் அலட்சியம்

இந்தியத் துணைக்கண்டப் பிரதமர் நேருவிற்கு மாஸ்கோவில் தரப்பட்ட ஆடம்பரமான வரவேற்பை, பிரிட்டிஷ் பத்திரிகைகள் மிகமிகச் சாதாரணமானதெனக் கருதி, அதற்குரிய முக்கியத்துவத்தைச் செய்தி பிரசுரிப்பதில் காட்டாமல இருந்துவிட்டன.

லண்டன் பொதுவுடைமை பத்திரிகையான 'டெய்லி ஒர்க்கர்' நீங்கலாக, மற்றப் பத்திரிகைகளுக்கு மாஸ்கோவில் தனி நிருபர்கள் தற்சமயம் இருக்கவில்லை.

பெரிய ஆங்கில இதழான 'டைம்ஸ்' பத்திரிகையின் ரஷ்ய நிருபர்கூட, இப்பொழுது லண்டன் நகரிலேயே இருந்துகொண்டு தனது முன்னாள் ரஷ்ய சுற்றுப் பயணம் குறித்து, கட்டுரைகள் தீட்டிக் கொண்டு இருக்கிறார்.

பிரிட்டிஷ் பத்திரிகைகளின் இந்த அலட்சியத்திற்கு, பண்டிதருக்குதான் தரும் பகட்டான வரவேற்பும் 'சமாதானத் தாக்குதல்' நடத்துவதற்கான ரஷ்யாவின் புதிய ஏற்பாடாக இருக்கக் கூடுமென, அவைகள் கருதுவதே முக்கிய காரணமாக இருக்கக்கூடுமென யூகிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் வானொலி நிலையத்தின் செய்தி அறிக்கை, பண்டிதர் மாஸ்கோ சென்றடைந்ததை அறவே இருட்டடிப்பு செய்துவிட்டது.

20 லட்சம் ஏகர் புஞ்சை நிலம்

15,000 பேர்களிடம் உபரியாக உள்ளதாம்!

ஐதராபாத்தில் நிலமில்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கக் கூடிய உபரிநிலங்கள் 20 லட்சம் ஏகரா புஞ்சை இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளதாம் இவை 15,000 பேர்களிடம் இருக்கிறதாம்.

கம்யூனிஸ்டுகளின் தேர்தல் முஸ்தீபு!

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் காங்கிரஸ் டிசம்பரில் முடிந்த உடனேயே, எதிர் நோக்கும் பொதுத் தேர்தலுக்கு பிரச்சாரத்தில் ஈடுபட கம்யூனிஸ்டுகள் தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★

முன்னாள் பொதுச்செயலாளர்

அண்ணாதுரை அவர்கள் வருகை

★

முன்னாள் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களிடம், தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிதி வசூலாகியுள்ள தொகையைப் பொதுக்கூட்டத்தில் கொடுக்க விரும்புவதாயும், தங்கள் மாவட்டத்தில் உடனடியாக சுற்றுப்பிரயாணம் செய்ய தேதி தரும்படியும் கடிதம் எழுதியிருக்கிறார்கள்; மிகவும் மகிழ்ச்சி.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அன்புடன் வாக்களித்தபடி நிதி வசூல் செய்திருக்கும் தொகையை உடனே பொதுச் செயலாளர் அவர்கள் முகவரிக்கு அனுப்பி வைத்து தோழர்கள் கடிதம் எழுதினால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான்கு நாட்களுக்கு சுற்றுப் பிரயாண நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்படுத்தி வெளியிடப்படும்.

தனித்தனி ஊர்கட்கு தோழர்கள் அழைப்புகள் அனுப்பாமல், தங்கள் மாவட்ட செயலாளருடன் கலந்து பேசி பொதுக்கூட்ட ஏற்பாடுகளைச் செய்க—மாவட்டச் செயலாளர் அவர்கள் மூலம் இங்கு செய்தி அனுப்ப வேண்டுகின்றோம்.

ஜூலை மாதம் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள் ஆரம்பமாகலாம்.

இராயபுரம், சென்னை-13, 7—6—'55. } —பொறுப்பாளர், தி. மு. கழகம், தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம் : அறிக்கை—15/55

மாநில மாநாட்டு நிதி

★

முன்பணமாக மாநில மாநாட்டிற்குத் தேவைப்படும் நிதி ரூ. 25,000 பொதுக் குழுத் தீர்மானப்படி, மாவட்ட தி. மு. கழகங்கள் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகத் திரட்ட முற்படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு விரைவில் மாநில மாநாடு நடைபெற வழி ஏற்படும்.

நிதி தலைமைக் கழகத்துக்கு வந்து சேர்ந்த பிறகுதான் மாநில மாநாட்டிற்கான நாள் குறிப்பிடவேண்டியிருக்கிறது.

மாவட்டக் கழகச் செயலாளர்கள், பொதுக் குழுக் கூட்டத்தில் தங்கள் தங்கள் மாவட்டப் பங்காக வாக்களித்த தொகையை, ஜூன் திங்கள் 20-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கும்படி வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆங்காங்குள்ள சிற்றூர்—பேரூர்—நகரக் கிளைக் கழகத்தாரும், கழகப் பற்றுடையோரும் மாநில மாநாட்டு நிதியை வெற்றிகரமாக விரைவில் திரட்டி, மாவட்டச் செயலாளர்களுக்கு உதவியாகப் பணி புரியும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள.

* * *

மாநில மாநாட்டு வரவேற்புக் கட்டணத் தொகை ரூ. 10 செலுத்தாத பொதுக் குழு உறுப்பினர்கள் உடனடியாகச் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

மாநில மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினராக விரும்பும் பொதுக் குழு உறுப்பினரல்லாத கழக உறுப்பினர்கள் ரூ. 25 தலைமைக் கழகத்துக்கு அனுப்பிப் பதிவு செய்துகொள்ளலாம்.

"அறிவகம்" சென்னை 8—6—55 } **இரா. நெடுஞ்செழியன்,** பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

க. அன்பழகன்

சுற்றுப் பயண நிகழ்ச்சிகள்

★

நாட்டரசன்கோட்டை

3—6—55 மாலை 6-30 மணிக்கு நாட்டரசன்கோட்டை இளைஞர் முற்போக்கு மன்றத்தின் முதலாண்டு விழா, தோழர் நாராயணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் அறிவுடைநம்பி, எம். எஸ். இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றியபின், தோழர் க. அன்பழகன், தி. மு கழகத்தின் இலட்சியத்தை விளக்கியும், திராவிடம் பிரிய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் விரிவுரையாற்றினார். தோழர்கள் மூவருக்கும் கைத்தறித் துண்டுகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன. தோழர் அன்பழகன் அவர்களுக்கு முஸ்லிம் சங்கத்தாரால் ஒரு கைத்தறித் துண்டு அணிவிக்கப்பட்டது

முகவை (இராமநாதபுரம்)

இந்நகர் அழகிரி படிப்பகத்தின் மூன்றாம் ஆண்டு விழா 4—6—55 காலை 11 மணிக்கு தோழர் அன்பழகன் அவர்களால் தி. மு கழகக் கொடி ஏற்றலுடன் துவங்கியது.

மாலை 3 மணிக்கு 'அழகிரியின் வாழ்க்கை' எனும் பொருள் குறித்து படிப்பகத்தில் பேச்சுப் போட்டி நடைபெற்றது. தோழர்கள் எம். எஸ் இராமசாமி, அறிவுடைநம்பி, குருசாமி ஆகியோர் போட்டிக்கு நடுவர்களாக இருந்து தோழர்கள் இளஞ்செழியனையும், ஆறுமுகத்தையும் முறையாக முதல், இரண்டாவது பரிசுகளுக்கு உரியவர்களாகத் தேர்ந்தெடுத்தனர்.

பின்னர் படிப்பகத்தின் முன்னால் மாலை 6-30 மணி அளவில்

பல்லாவரம் கைவல்யம் படிப்பக நிதிக்காக

11—6—55 மாலை 6-30 மணிக்கு, பல்லாவரத்தில், அண்ணா அவர்கள் தலைமையில், கைவல்யம் படிப்பக நாடக மன்றத்தார் நடிக்கும் 'மக்கள் தீர்ப்பு' என்ற நாடகம் நடைபெறும்.

மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 100 தரப்படவிருக்கிறது.

ஆண்டு விழாப் பொதுக்கூட்டம். தோழர் அறிவுடை நம்பி தலைமையில் நடைபெற்றது. தோழர் எம். எஸ் இராமசாமி, நேரு பண்டிதர் தமிழர் மீது வீசிய சுடு சொல்லைக் கண்டித்தும், திராவிடர் உரிமை முழக்கங்கள் வெற்றி பெறும் காலம் விரைவில் வந்துவிட்டது என்பதையும் எடுத்துக்காட்டி சிறிது நேரம் பேசிய பின், இறுதியாக தோழர் அன்பழகன் அவர்கள், "நாம் சொல்லியதை எல்லாம் அன்று எதிர்த்தவர்கள் பலரும், இன்று அதையே சொல்லுகிறார்கள்" என்பதை எடுத்துக்காட்டி, 'சுதேசமித்திரன்' இதழ் வெளியிட்டுள்ள கேலிச் சித்திரங்கள் எத்துணை தூரம் ஆழமான கருத்தை அறிவிக்கின்றது என்பதை விளக்கியும், நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்தியும், தமிழ் மொழியின் ஆக்கம் குறித்தும் நீண்டதோர் விரிவுரை ஆற்றினார். தோழர் அன்பழகன் அவர்களுக்கு முகவை தி. மு. இளைஞர் கழகச் சார்பில் கைத்தறித் துண்டு அணிவிக்கப்பட்டது.

மதுரை—

சிறப்புச்சொற்பொழிவு

திருச்சி மாநில மாநாட்டு நிதிக்காக, மதுரை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம், மதுரை செல்வம் தொட்டகையில் 5—6—55 காலை 10-30 மணி அளவில் தோழர் எம் எஸ் இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் அறிவுடைநம்பி 'மறுமலர்ச்சி' எனும் பொருள் குறித்துப் பேசினார். அடுத்து தோழர் அன்பழகன் 'இராமாயணம்' எனும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார் இறுதியில் மாவட்டச்செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் நன்றி கூறினார்.

செய்திச் சுருள்

★

டி. ஐ. சைக்கிள் பாக்டரி தொழிலாளர் சங்கம்

3-6-55 மாலை 5½-மணிக்கு தோழர் ஜி. எம். மதுரையார் தலைமையில் நடைபெற்ற மேற்படி யூனியன் பொதுக் கூட்டத்தில் சென்னை வி. கோபால நாயக்கர் அண்டு சன்ஸ் பேபின் பவுண்டரி நிர்வாகத்தினரின் போக்கைக் கண்டித்தும், அவ்வலுவலகத்தின் தொழிலாளர் கோரிக்கைக்கு ஆவன செய்வதற்கு சர்க்கார் முன்வர வேண்டுமெனக் கோரியும், டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலையிலுள்ள அதிகாரிகளின் போக்கை வன்மையாகக் கண்டித்தும், இதுபற்றி நிர்வாகிகள் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஓட்டல் தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டம்

3—6—55 இரவு 9 மணிக்கு சென்னை கன்னா மண்டபத்தில் சென்னை நகர ஓட்டல் தொழிலாளர் சங்கச் சார்பில் தோழர் குஞ்சுகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் கே சங்கரநாராயணன், கே. என். ஹரிபட் சந்திரன், எ. கோவிந்தசாமி ஆகியோர் உடுப்பி ஓட்டல் தொழிலாளர்களின் சத்தியாக்கிரகப் போராட்டம் குறித்துச் சொற்பொழிவாற்றினர். பின்னர் உடுப்பி ஓட்டல் முதலாளி, ஒப்பந்தத்தை மீறி 6 தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியதைக் கண்டித்தும், நியாயமான கோரிக்கைக்காகக் கிளர்ச்சி செய்யும் தொழிலாளர்களில் 20 பேரைக் கைது செய்திருப்பது குறித்து சர்க்காரைக் கண்டித்தும், உடனடியாக அவர்களை விடுதலை செய்வதுடன் வேலையிலிருந்து நீக்கப்பட்ட 6 தொழிலாளர்களையும் மீண்டும் வேலைக் கெடுத்துக் கொள்ள சர்க்கார் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஜெனரல் அண்டு இண்டஸ்டிரியல் தொழிலாளர் யூனியன்

1-6-55 இரவு 9-30 மணிக்கு, சென்னை சைனா பஜார், கன்னா மண்டபத்தில், தோழர் கே எஸ். ஷெட்டி தலைமையில், வண்ணை ஜெனரல் அண்டு இண்டஸ்டிரியல் தொழிலாளர் யூனியனின் கிளைச் சங்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஏ. வி. குமார், கே. எஸ். இராமராவ், வி. ஜி இராமசாமி, ஆர். ஆர். சந்திரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்ட இறுதியில், திரு. என். எம். ஜோஷி இயற்கை எய்தியமை குறித்து, அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

பாராட்டு விழா

5—6—55 இரவு 7½ மணிக்கு வண்ணை கே. எஸ். பரண்டியன் படிப்பகத்தில் சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் இளம்பரிதி அவர்களுக்கு தோழர் கா. தி. சு. மூர்த்தி தலைமையில் படிப்பக உறுப்பினர்களால் வரவேற்பும், தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது. பாராட்டுதலுக்கு தோழர் இளம்பரிதி நன்றி தெரிவித்துப் பேசினார்.

திருமணம்

2-6-55-ல், தோழர் ப. உ. சண்முகம் தலைமையில், காரப்பட்டு தோழர் அ. சுந்தரம்—தோழியர் முனியம்மாள் திருமணம் நடைபெற்றது. இத் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி— பொறுப்பாளர்.

1954-ம் ஆண்டில் இந்தியாவின் எஃகு உற்பத்தி ஒரு உச்சஅளவை 12,26,000 டன் எட்டியது. அந்த ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து மொத்தம் 3,87,401 டன் எஃகு [illegible]

ரஷ்ய குடியரசுத் தலைவருடன்!

பண்டித நேரு உரையாடினார்

மாஸ்கோ சென்றுள்ள இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர், சோவியத் ரஷ்யக் குடியரசின் மக்கள் தலைவரான விரோஷிலோவைச் சந்தித்து உரையாடியிருக்கிறார்.

கிரெம்லினில், சோவியத் பிரதமர் புல்கானின், பிரதமர் நேருவிற்கு 'மாபெரும்' விருந்தொன்று அளித்திருக்கிறார்; அவ்விருந்தில், மாஸ்கோவில் உள்ள எல்லா நாடுகளின் அரசாங்கத் தூதுவர்களும், அதிகாரிகளும் கலந்துகொண்டனராம்.

மாஸ்கோவிலுள்ள இந்தியத் தூதுவராலயத்தில் தங்களுக்களிக்கப்பட்ட விருந்தொன்றில் சோவியத் தலைவர்கள் பலர், பிரதமர் நேருவுடன் மூன்று மணி நேரத்திற்கு மேல் இருந்து உரையாடிக் கொண்டிருந்தனராம்.

தொழிற்சாலைகளில் நேரு:

மாஸ்கோவிலுள்ள ரஷ்ய விமானத் தொழிற்சாலையை நேரு பார்வையிட்டார். இத்தொழிற்சாலையில் இரண்டு 'டர்பன்' பொருத்தப்பட்ட நடுத்தர ஜெட் வெடி விமானங்களும், பிரயாணிகள் போக்குவரத்திற்கான விமானங்களும் செய்யப்பட்டு வருகின்றன

பின்னர் ரஷ்யாவிலேயே மிகப் பெரிய மோட்டார் தொழிற்சாலைக்குச் சென்றார்.

இந்த மோட்டார் தொழிற்சாலை மிகப் பெரியதும், பழமைவாய்ந்ததுமான தொழிற்சாலையென்றும், இதில் 40,000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர் என்றும், தொழிலாளர் எண்ணிக்கையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது நாளொன்றுக்கு 400 - மோட்டார்கள் வீதம் இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகிறதாம்

குறும்புத்தனமான.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கான உரிமையை நிலை நாட்டிக் கொள்வதற்கு: அவர், தன்னுடைய எதிரிகளின் அனுமதியைப் பெற வேண்டும்,' என்றுதான், பஞ்சாப் சர்க்காரின் இந்தப் போக்கு பொருள் தருகிறது.

"உரிமைகளைநிலைநாட்டிக்கொள்வதற்காக நடைபெறும் அகாலி தளக் கிளர்ச்சிக்கு பொதுமக்களும்; அரசியல் கட்சிகளும் ஆதரவு தரக் கேட்டுக்கொள்கிறேன்.

"அகாலி தளத்தவர், தங்களின் கோரிக்கைகள் நிறைவேறும் வரையில் தொடர்ந்து கிளர்ச்சியில் ஈடுபட உறுதி பூண்டிருக்கின்றனர்," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பிரிக்க முடியாதவை?

"அமிர்தசரசில் உள்ள குருத்துவாரா மன்றியை அரசியல் காரியங்களுக்கு ஏன் உபயோகப்படுத்துகிறீர்கள்?" என்று கேட்கப்பட்ட போது, "எங்கள் மதமும், அரசியலும் பிரிக்க முடியாதவை; சுதந்திரத்திற்கு முந்திய நாட்களில் கூட டாக்டர் மூஞ்சே, பண்டித மதன் மோகன மாளவியா, டாக்டர் கிச்சிலு போன்றவர்கள், குருத்துவாரத்தில் அரசியல் சொற்பொழிவு நிகழ்த்தியிருக்கிறார்கள்" என்று சர்தார் பகதூர்சிங் பதிலளித்தாராம்.

மக்கள் சபை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தினார்த ஒத்திவைக்க வேண்டும் என்று ஒரு பிரேரணை கொண்டுவந்தனர்; இதை சோஷலிஸ்டுகள் ஆட்சேபித்ததால், இரு சாராருக்கும் கைகலப்பு ஏற்பட்டு அடி, உதை, குத்து என்ற ரீதியில் சபைக்குள் அட்டகாசம் புரிந்திருக்கின்றனர்!

கங்கை நதியில் படகு விபத்து

ஏராளமான பெண்கள் மூழ்கி மாண்டனர்

கங்கை நதியில், அலகாபாத்திற்கு 10 கல் தொலைவில் உள்ள ஷஹாத்கன்ஜ் எனுமிடத்தில் ஒரு படகு கவிழ்ந்ததின் விளைவாக சுமார் 50 பேர் மரணமுற்றிருக்கக் கூடும் என்று ஊர்ஜிதமற்றச் செய்திகள் கூறுகின்றன.

மரணமுற்றவர்களில் 35 பேர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளனவாம். அவர்கள் அனைவரும் புல் வெட்டும் பெண்கள் என்றும், கால்நடைகளின் தீவனத்திற்காக கங்கையைக் கடந்து புல் வெட்டி வரச்செல்லுகையில் படகு கவிழ்ந்து மூழ்கி இறந்ததாகவும் கூறப்படுகிறது.

அப்படகில் மொத்தம் 60 பேர் சென்றதாகவும், விபத்திலிருந்தும் 10 பேர் தப்பி கரை சேர்ந்தனர் என்றும், அப்படகை ஓட்டிச் சென்றவர் தற்போது தலைமறைவாக இருப்பதாகவும் தெரிகிறது.

இவ்விபத்தில் குறைந்த பட்சம் 32 பேராவது மாண்டிருக்கக் கூடும் என்று உத்தியோக பூர்வமான செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

மற்றுமொரு செய்தி, அப்படகு 50 பேரை ஏற்றிச் சென்றதாகவும். விபத்தில் சிக்காமல் 20 பேர் கரை சேர்ந்துள்ளனர் என்றும் கூறுகிறது.

விபத்து நடைபெற்றபோது நேரில் அதனைப் பார்த்தவர்கள் எவரும் இல்லையாதலால், அப்படகில் சென்றவர்கள் எத்தனை பேர், விபத்திற்குள்ளானவர்கள் எத்தனை பேர் என்ற தகவல் சரியாகத் தெரியவில்லையாம்.

அந்தப்படகில் 50 பேர்களை ஏற்றிச் செல்வது அதிகப்படியான எண்ணிக்கையாகுமென ஒருவர் கூறியிருக்கிறாராம்

எனினும், விபத்திலிருந்து மீட்கப்பட்டவர்களில் ஒருவர் அப்படகில் 60 பேர் ஏறிச் சென்றதாகவும் தெரிவித்திருக்கிறார்.

எண்ணெய்க் கப்பல்கள் மோதிக்கொண்டன

லண்டன், ஜூன் 9—

இங்கிலீஷ் வாய்க்காலில் ஒரு பனாமா எண்ணெய்க் கப்பலுடன் மோதிக்கொண்ட 10,783 டன் எடையுள்ள 'ஜோகனிஷஸ்' என்ற ஸ்வீடிஷ் எண்ணெய்க் கப்பல் தீப்பிடித்து இன்னும் எரிந்து கொண்டேயிருப்பதாகச் செய்தி ஒன்றின் மூலம் தெரியவருகிறது.

இவ்விபத்தில் குறைந்தது 4 பேராவது மரணமுற்றிருக்கலாம் என கருதப்படுகிறதாம்; மேலும் கப்பல் 'தலைவர்' காணப்படவில்லையாம்.

விபத்துச் செய்தியறிந்த மீட்சிப் படகுகள் இடத்திற்கு விரைந்து சென்று குறைந்த அளவு 23 பேரை விபத்திலிருந்தும் மீட்டதாகவும், விபத்தில் ஒரு ஜெர்மானியர் மாண்டுபோனதாகவும், கப்பலில் வந்துகொண்டிருந்தவர்களில் மீட்கப்பட்டவர்களும், இறந்து போனவர்களும் நீங்கலாக இன்னும் 19 பேரைக் காணவில்லையென்றும், இவர்களும் அனேகமாக மாண்டிருக்கலாமோ என அஞ்சப்படுவதாகவும் அச்செய்தி விவரம் தெரிவிக்கிறது.

இலங்கைப் பிரதமருக்கு 'மிகப் பெரிய' பட்டம்!

தாய்லாந்து அளிக்குமாம்!

இத்திங்கள் 18-ந் தேதியன்று தாய்லாந்து நாட்டுப் பிரதமர் சோங்கிராம் இலங்கைக்கு வரும் போது, இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலைக்கு 'ஆர்டர் ஆப் தி ஒயிட் எலிபெண்ட்' எனும் பட்டத்தை வழங்குவார் என்று தெரிகிறது.

மேற்குறித்த இப்பட்டம்தான் தாய்லாந்து நாட்டின் 'மிகப் பெரிய' பட்டம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கழகக் கூட்டங்கள்

★

மாதவரம்
மங்குத்துரை தோட்டம்
தேசிங்கு அரங்கில்
12—6—55 மாலை 5 மணிக்கு
தலைவர்: எம். ஈ. பாண்டியன்
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
ஏ. கே. சாமி எம்.சி.
அ. செயராசு
மா. பொ. வேதாசலம்

குறிப்பு: கூட்டத்தில் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களிடம் மாநில மாநாட்டுக்கு நிதி அளிக்கப்படும்.

★

வடக்கூர் (தூத்துக்குடி)
12—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: எஸ். ஒ. வெற்றிவேல்
பேசுபவர்:
ஈ. வெ. கி. சம்பத்

★

குமாரபாளையம்
சந்தைப்பேட்டை மைதானத்தில்
12—6—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
அருண்மொழி

★

பிளாக்பள்ளி (பெங்களூர்)
கழகக் கட்டிட எதிரில்
12—6—55 மாலை 5 மணிக்கு
தலைவர்: ஏ. டி. பிரான்சிஸ்
பேசுவோர்:
கி. சோழன்
எஸ். எஸ். தென்னரசு

சென்னை 35-வது வட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

11—6—55 இரவு 8½ மணிக்கு, சென்னை 35-வது வட்ட (கோடம்பாக்கம்) தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது திரு. வி. க. பள்ளி பற்றி ஆலோசிக்கப்படும்

இலக்குமணபுரி (பெங்களூர்) தி.மு.கழக உறுப்பினர்கட்கு

12—6—55 பிற்பகல் 1-30 மணிக்கு, பெங்களூர்-இலக்குமணபுரி தி. மு. க நிர்வாகிகள் தேர்தல் தோழர் ஜி. எஸ். அண்ணியப்பன் தலைமையில் நடைபெறும்.

பிளாக்பள்ளி (பெங்களூர்) தி. மு. கழக பொதுக் குழு உறுப்பினர்கட்கு

12—6—55 காலை 9½ மணிக்கு. பெங்களூர்-பிளாக்பள்ளி காந்தி சவுக் வீதியில் அமைந்துள்ள மிட்லண்ட் கார்ப்பரேஷன் மனையின் மேல் மாடியில் கழகப் பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும்.

திண்டுக்கல் நகர தி.மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

12—6—55 மாலை 3 மணிக்கு, திண்டுக்கல் நகர தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது பல பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

சிங்காரவேலர் நினைவுப் படிப்பக 3-ம் ஆண்டு விழா

12—6—55 மாலை 6 மணிக்கு, மதுரை, கோரிப்பாளையம் மேற்படி படிப்பகத்தின் முன்பாக நடைபெறும். தோழர்கள் எஸ். முத்து, வே. சௌந்தரராசன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

'பரப்பிரம்மம்'—நாடகம்

11—6—55 இரவு 9 மணிக்கு குடியேற்றம் பிச்சனூர் நரிமுருகப்ப முதலி தெருவில், பகுத்தறிவு இளைஞர் மன்றச் சார்பில், தோழர் வி. ஜி. சீனிவாசன் தலைமையில் 'பரப்பிரம்மம்' எனும் நாடகம் நடைபெறும்.

தாழ்த்தப்பட்ட — பின்தள்ளப்பட்ட மாணவர்களுக்கு!

இலவச கல்வி வசதிப் பெருக்கம்

சென்னை சர்க்கார் முயற்சிகள்

சென்னை, ஜூன் 8—

தாழ்த்தப்பட்ட, பின்தள்ளப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்கு அதிகப்படி கல்வி வசதி அளிப்பதற்காக இந்த ஆண்டு, அரிசன நலத்துறை இலாகாவிற்கு சென்னை அரசாங்கம் 3 லட்சம் ரூபாய் அதிகமாக மானியம் கொடுக்கிறது. இந்த அதிகப்படி மானியத்தின் மூலம் சுமார் 1,000 பின்தள்ளப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், 1,000 தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் இலவச உணவு, தங்கும் வசதி கிடைக்கும் என்று தெரிய வருகிறது.

மொத்தத்தில் ஆண்டுதோறும் 1-வது படிவம் முதல், 6-வது படிவம் வரையுள்ள சுமார் 9,000 - மாணவர்களுக்கு உணவு வசதிக்கு சர்க்கார் பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் செலவிட்டு வருகிறதாகத் தெரிகிறது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சுமார் 217 - தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கென தங்கும் விடுதிகள் இருக்கின்றன சென்னை நகரப் பகுதியில் 13 மாணவர் விடுதிகள் உள்ளன. இவற்றுள் ஒன்று கல்லூரி மாணவர்களுக்கானது.

சம்பளச் சலுகை

மூன்றும் படிவம் முடிய ஏழை மாணவர்களுக்கு சம்பளச் சலுகை அளிக்கும் திட்டம், இப்போது துவங்கும் புதிய கல்வி வருடத்தில் அமுலுக்கு வருகிறது; இதற்கான உத்தரவு ஏற்கனவே சர்க்காரால் பிறப்பிக்கப்பட்டுவிட்டது.

மாணவரின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் வருமானம், ஆண்டுக்கு ரூ. 1,200-க்கு மேற்படாமலிருந்தால் அம்மாணவர் ஏழை என்று கருதப்பட்டு, சம்பளமின்றிக் கல்வி பயில அனுமதிக்கப்படுவார்; ஆனால், தனிக் கட்டணங்களை அந்த ஏழை மாணவர்களும் கட்ட வேண்டியதுதான்.

முதல் மாதத்தில் மட்டும் ஏழை மாணவர்களிடமும் சம்பளம் வசூலிக்கப்படுகிறது. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் வருமான சர்டிபிகேட்டுகளைப் பரிசீலிக்க அவகாசம் வேண்டுமென்பதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது; சலுகை பெற தகுதியுடையவர்களுக்கு இந்த முதல் மாத சம்பளத் தொகை பின்னர் திருப்பிக் கொடுக்கப்படும்.

கப்பல் அதிகாரிகள் தாக்கிக் கொண்டனர்!

சென்னையிலிருந்து புறப்பட்ட கப்பல் மீண்டும் திரும்பியது

சென்னைத் துறைமுகத்திலிருந்து சாமான்கள் ஏற்றிக்கொண்டு பம்பாயை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒரு கப்பல், நடுக்கடலில் சென்றுகொண்டிருக்கையில் அக்கப்பலிலுள்ள பிரதம அதிகாரியும், பிரதம எஞ்சினீயரும் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டதால், பிரதம எஞ்சினீயர் கண்ணில் பலமான அடிபட்டு, உடனே அவருக்கு முதலுதவி மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டாலும் கூட, சரியான சிகிச்சை அளிப்பதற்காக மறுபடியும் சென்னை துறைமுகத்தை வந்தடைந்தது.

சென்னை வந்தடைந்த கப்பல், அவ்விரண்டு அதிகாரிகளையும் சென்னையில் இறக்கிவிட்டுஉடனே புறப்பட்டுச் சென்றுவிட்டது.

இதுபற்றிய விசாரணையின் போது, அந்த இரு அதிகாரிகளும் எவ்வித வாக்குமூலமும் தர மறுத்து விட்டார்களாம்; தாங்கள் இருவரும் 'நண்பர்கள்' என்றே கூறியிருக்கிறார்களாம்!

திருமணங்கள்

★

12—6—55 காலை 8½ மணிக்கு, சென்னை-சூளை, கலியாண மேஸ்திரி தோட்டம் (திரு வி. க திடல் அருகாமையில்) தோழர் ப. எழிலன் தலைமையில், தோழர் செ. வேலன்-தோழியர் த. பரிமளம் திருமணம் நடைபெறும். அதுபோது, தோழர்கள் டி வி நாராயணசாமி, மு. மாசிலாமணி, தோழியர் பூங்கோதை ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது-வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

* * *

12—6—55 காலை 8 மணிக்கு, சென்னை, மயிலாப்பூர், எண் 8, அரங்காதபுரம் தெருவில், தோழர் கா. அப்பாதுரை தலைமையில், தோழர் என். முத்துமாணிக்கம்—தோழியர் பத்மாவதி திருமணம் நடைபெறும். தோழர் விருதை-ந. இராமசாமி, கோ. இளவரசு, தோழியர் அலமேலு-அப்பாதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

12—6—55 காலை 7 மணிக்கு, சென்னை-பெரவள்ளூர் பார்த்தசாரதி ரெட்டி தெரு, 21-வது எண்ணுள்ள இல்லத்தில், தோழர் எஸ். ஈ. சுப்ரமண்யம் தலைமையில், தோழர் எம். ஈ. வஜ்ஜிரவேலன் —தோழியர் எம். எம். ராணி திருமணம் நடைபெறும். தோழர்கள் காஞ்சி மணிமொழியார், சொர்ணம், ஆர். ஜார்ஜ், வி. சி. தமிழ்தாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

12—6—55 காலை 8½ மணிக்கு, சென்னை, பெரம்பூர், எண் 49, பாக்ஸன் ரோடில், தோழர் அருணோதயம் தலைமையிலும், தோழர்கள் அருணன், கே. கணேசன், எஸ். செல்லபாண்டியன், தென்னரசு ஆகியோர் முன்னிலையிலும் தோழர் ஏ. எம். ராகுவேலு— தோழியர் அன்னலட்சுமி திருமணம் நடைபெறும்.

* * *

12—6—55 காலை 9 மணிக்கு, அண்ணாமலை நகர், தெற்கிருப்பில், தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில், தோழர் தெய்வசிகாமணி —தோழியர் அலமேலு திருமணம் நடைபெறும். தோழர்கள் க. திருமாறன், பொ. சொக்கலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

★

11—6—55 மாலை 6½ மணிக்கு, வடசென்னை குறள் நெறிக் கழக அறையில், தோழர் எஸ். ஆறுமுகம் தலைமையில், 'நாடும்-கேடும்' என்பது பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

12—6—65 காலை 10 மணிக்கு, சென்னை, முத்தியாலுப்பேட்டை, சாலைவிநாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றத்தில், தோழர் டி. வேலாயுதம் தலைமையில் 'விஞ்ஞானத்தின் வெற்றி' என்னும் பொருள் பற்றி மன்றத்தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா, நெடுஞ்செழியன், எம். ஏ.